# திராவிட சினிமா 11

**கருத்து மக்களிடம் பற்றிக் கொண்டால் தீயாகப் பரவும் என்பதுபோல, திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். கல்வியில் முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த தலைமுறைக்குக் கொள்கை பேசிய கலைவடிவங்கள் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தன. அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

**■ வீ.மா.ச.சுபகுணராஜன்**

படங்கள் உதவி : ஞானம்





## “அண்ணா நீங்கள்தான் ஆளவேண்டும்!”

கலைஞர் எனும் திரைக்கதை வசனகர்த்தாவின் பங்களிப்பின் உச்சம் என்று ஒரு படத்தைக் குறிப்பிடுவது முறையில்லை. ஆனாலும், ஒரு படைப்பாளியின் படைப்புகளில் உச்சங்கள் உண்டுதான். கலைஞர் போன்ற எண்பதாண்டு கால எழுத்தாளுமையின் உச்சந்தொட்ட தருணங்களில் ‘மனோகரா’ திரைப்படமும் உண்டு.

ஏற்கெனவே இருக்கும் வெற்றிகரமான நாடகப் பிரதிகளைத் திரைக்கதையாக்கும் நுட்பத்தை, கலைஞர் பலமுறை கையாண்டு வெற்றி கண்டவர். ‘மனோகரா’வும் தமிழ் நாடக ஆசான் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களால் 1896-ல் எழுதப்பட்டு, சுமார் இரண்டாயிரம் முறை அரங்கேறிய நாடகம். 1907-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட நாடகப் பிரதியையும், ‘மனோகரா’ படத்தின் திரைக்கதை வசனத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், கலைஞரின் கைவண்ணம் தெரியும்.

### தாய்க்குக் கட்டுப்பட்ட வீரன்!

கதைக்களம் எளிமையானது. சோழ மன்னர் புருஷோத்தமன், காதலி வசந்தசேனையின் (டி. ஆர்.ராஜகுமாரி) அழகில் மயங்கி, பட்டத்து அரசி பத்மாவதியை (கண்ணாம்பா) புறக்கணிக்கிறார். இளவரசன் மனோகரன் (சிவாஜி கணேசன்) மாபெரும் வீரன். பாண்டிய நாட்டை வென்று, இளவரசியை மணந்து கொள்கிறான். மனோகரனது அடங்காத கோபத்தை தாய் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார். வசந்தசேனையின் சதி, பத்மாவதியையே பழி சொல்வதாகும் போது மனோகரன் கொந்தளித்து எழுந்து, தாயின் அனுமதி பெற்று அநீதிக்கெதிராக வெகுண்டு தாக்குதல் தொடுத்து, அரசரையும் ஆட்சியையும் காப்பாற்றி, வசந்தசேனையின் அழிவுக்கு வழி செய்கிறான்.

மன்னர் ரசமிழந்தவர். வசந்தசேனையோ சதியின் உரு. கணவனைக் கொன்று, அரசனைக் கைப்பிடித்து பட்டத்து அரசியாகி, மன்னரின் மகன் எனப் பொய்யாகச் சொல்லிய தனது மகனுக்கு முடிசூட்டுவதும் திட்டம். மனமுதிர்ச்சியற்ற மகன் வசந்தன் (காக்கா ராதாகிருஷ்ணன்) நல்லவன். மனோகரன் மாவீரன், களம் பல கண்டு வென்றாலும் தாயின் வார்த்தைக்குக் கட்டுப்படும் அன்புமகன். பட்டத்து அரசி சுயமரியாதை மிக்கவள், ஆனாலும் பதிபக்தி எனும் கடமை அவளைக் கட்டுப்படுத்துகிறது.

### மெருகேற்றப்பட்ட நாடகப் பாத்திரங்கள்!

இந்தப் பாத்திரங்களை அப்படியே மெருகேற்றி திரைக்கதையாக்கிய போது கலைஞர் காட்சிகளையும் வசனங்களையும் நவீனமாக்கினார். நாடகக் காட்சிகளில் இருந்த தொய்வை முற்றாக நீக்கி, திரைக்கதையின் போக்கை வேகப்படுத்தினார். அருமையானவையாயினும் பம்மல் சம்பந்த முதலியார் வசனங்களின் மொழியில் பழைமையும், சனாதனச் சிந்தனைகளும் நிறைந்திருந்தன. அவற்றை நவீனப் பகுத்தறிவின் வெளிச்சம் படர்ந்த மொழி கொண்டு, பொருத்தமான முறையில் மாற்றியமைத்தார். மாதிரிக்கு, அரசவையில் மன்னரும், மனோகரனும் மோதிக் கொள்ளும் காட்சி.

> **என் தாய் அன்பின் பிறப்பிடம், அறநெறியின் இருப்பிடம், கருணை வடிவம், கற்பின் திருவுருவம், மாசற்ற மாணிக்கம், மாற்றுக் குறையாத தங்கம். அவர்களை அவதூறு கூறிய அங்கங்களை பிளந்தெறிவேன்.**

நாடகத்தில் தன்னைத் தானே சங்கிலியில் பிணைத்துக் கொண்டு அரசவைக்கு வரும் மனோகரனிடம், தாய் பத்மாவதியைச் சிறைக்கு அனுப்பிவிட்டு, அமைச்சர் சத்தியசீலரைச் சிரச்சேதம் செய்ய ஆணையிடுகிறார் மன்னர்.

மனோகரன் பேசுகிறான், “இதுவோ உங்கள் செங்கோல் முறைமை. யார் உமக்கு இந்நீதி கற்பித்தது? வசந்தசேனையோ? அண்ணா, ஒரு அற்பப் பெண் வலையிலகப்பட்டுத் தாம் இவ்வாறு நியாயமெல்லாம் தப்பி நடக்கலாமோ? காரணங் கூறாது ஒருவனைக் கொல்லும்படி கட்டளையிட உமக்கு, எந்த தர்ம சாஸ்திரத்தில் கூறியிருக்கிறது? சோழநாட்டின் கஜபதியாகிய தாமே இவ்வாறு தர்மம் தவறி நடந்தால், உமது பிரஜைகளெல்லாம் சன்மார்க்க வழியில் எப்படி நடப்பார்கள்?“

தொடர்ந்து நாடகத்தில் மோதல் முற்றுகிறது. ‘‘புருஷோத்தம ராஜனே! என்ன யோசிக்கிறீர்? எடுத்துக் கொள்ளும் உமது வாளை. மனோகரனது புய வலிமை இன்றே காண்பீர்! நிராயுதபாணியாயிருக்கும் உம்மைக் கொல்வது நியாயமன்று - எடும் வாளை! அல்லது தாம் கூறியது தவறென்று என்னை மன்னிப்புக் கேளும்! இனி ஒரு நொடியேனும் சும்மா இருப்பீராயின், தர்மத்தைப் பாராமல் என்னைத் தூற்றிய தலையை வெட்டியெறிவேன்!- ஆஹா வசந்தசேனை! நீயும் பக்கத்திலிருக்கிறாயா? உங்களிருவரையும் ஒரே வெட்டாக வெட்டியெறிகிறேனிதோ! புருஷோத்தம ராஜனே! காத்துக் கொள்ளும் உமது தலையை சௌகரியமிருந்தால்! ”

### இனி, கலைஞரின் திரைக்கதை

திரைக்கதையில், அரசரின் ஆணைப்படி வீரர்களால் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருக்கும் மனோகரன், அவர்களை இழுத்தபடி அரசவைக்குள் நுழைகிறான். அரசவையில் வாதம் நிகழ்கிறது.

மன்னர்: “ஆத்திரத்தைக் கிளப்பாதே, நிறைவேற்று அரசன் உத்தரவு”.

மனோகரன்: ‘‘அரசன் உத்தரவென்ன ஆண்டவனின் உத்தரவிற்கே காரணம் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். அரசே, சிறைக்குச் செல்ல வேண்டும் தாய் என்று கேள்விப்பட்ட பிறகு அடங்கிக் கிடப்பவன் ஆமை”.

மன்னர் : “தாய்க்கும் தந்தைக்கும் வேற்றுமை அறியாத மூடனே, தந்தையின் ஆணையைக் கேட்டு தாயாரின் தலையை வெட்டியெறிந்த பரசுராமனைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா நீ?”

மனோகரன்: “பரசுராமன் அவதாரம். மனோகரன் மனிதன்”.

திரைப்படத்தின் தொடரும் காட்சியில், “புருஷோத்தமரே , புரட்டுக்காரியின் உருட்டு விழியில் உலகத்தைக் காண்பவரே. மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த மறவேந்தர் பரம்பரையில் மாசாக வந்தவரே. மயிலுக்கும் மந்திக்கும் வித்தியாசம் தெரியாத மதிவாணரே! குளிர் நிலவைக் கொள்ளிக்கட்டையென கூறிய குருடரே! என் தாய் அன்பின் பிறப்பிடம், அறநெறியின் இருப்பிடம், கருணை வடிவம், கற்பின் திருவுருவம், மாசற்ற மாணிக்கம், மாற்றுக் குறையாத தங்கம். அவர்களை அவதூறு கூறிய அங்கங்களை பிளந்தெறிவேன். இந்த துரோகப் பேச்சுக்கு, உம்மைத் தூண்டி விட்ட துரோகியின் உடலைத் துண்டாடுவேன். துணிவிருந்தால் தோளில் வலுவிருந்தால் எடுத்துக் கொள்ளும் உமது வாளை தடுத்துக் கொள்ளும் உமது சாவை...”

### மிகச் சிறந்த உச்சக்கட்டக் காட்சி

நாடகத்தில் பலகாட்சிகளில் நிகழும் நிகழ்வுகளை இறுக்கி ஒரு காட்சியில் அமைத்து, அதையே உச்சக்கட்டக் காட்சியாக மாற்றியிருப்பார் கலைஞர். அந்தக் காட்சியமைப்பில் சிவாஜி கணேசன், கண்ணாம்பா ஆகியோரின் கனல் தெறிக்கும் வசனங்கள், திரையரங்கிலேயே அந்தத் தகிப்பை உணரும்படி அமைக்கப்பட்டிருக்கும். அந்தக் காட்சி தமிழ்த் திரைப்படங்களின் மிகச் சிறந்த உச்சக்காட்சி என உறுதியாகச் சொல்லலாம்.

அதே போல பாத்திரங்களிலும் வசந்தசேனையின் கொல்லப்பட்ட கணவன் கேசரி வர்மன் மற்றும் வசந்தன் ஆகியோரை மாற்றியமைத்திருப்பார். பேயாக அலையும் வர்மனை பகுத்தறிவுக்கு ஒப்ப அருவமாக்கியிருப்பார். வசந்தனை அதே போல அண்ணன் மனோகரன் மீது பாசம் கொண்ட தம்பியாக்கியிருப்பார். உச்சக்காட்சியில் வசந்தசேனை எறியும் கட்டாரிக்குத் தன்னை பலியாக்கிக் கொண்டு, “அண்ணா நீங்கள்தான் நாட்டை ஆளவேண்டும்’’ என வேண்டி, ‘அண்ணாவின் அன்பு உடன்பிறப்பாக’ உயிர்துறப்பான்.

1954-ஆம் ஆண்டில், மாபெரும் இயக்குநர் எல்.வி.பிரசாத் அவர்கள் இயக்கத்தில், மூன்று மொழிகளில் உருவானது, இந்தப் படம்.

...படம் விரியும்

---

## கண்ணீர் சிந்தும் ‘அமுல்’ பேபி!



கூட்டுறவு அமைப்பின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்று, ‘அமுல்’ நிறுவனம். வர்கீஸ் குரியன் அவர்களால் குஜராத் மாநில பால் உற்பத்தியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ‘வெண்மைப் புரட்சி’ இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த சாதனைகளில் ஒன்று.

அந்நிறுவனத்தின் பொருட்களை விளம்பரப்படுத்த ஒரு குறும்புக்காரச் சிறுமியை அறிமுகப்படுத்தலாம் என்ற குரியனின் யோசனைக்கு, வடிவம் கொடுத்தவர் சில்வஸ்டர் த குன்ஹா. விளம்பர உலகில் ஜாம்பவானாக வலம் வந்த இவர்தான் ‘அட்டர்லி பட்டர்லி அமுல் பேபி’யை உருவாக்கியவர். இவர் ஜூன் 21 அன்று காலமானார்.

சமகால நடப்புகளைச் ‘சொல் விளையாட்டு’ மூலம் ஒரு வரியில் நகைச்சுவையாகக் கடத்தும் திறன் பெற்றவள் அந்த ‘அமுல்’ பேபி. கேரள எம்.பி.சசிதரூரின் சகோதரிகள் ஷோபா மற்றும் ஸ்மிதா ஆகியோர்தான் அந்த ‘அமுல்’ பேபிக்கான ஆரம்பகால மாடல்கள்.

1967-ல் ‘பிறந்த’ அந்தச் சிறுமி இன்றும் சிறுமியாகவே இருக்கிறாள், அதே குறும்புடன். தன் குறும்பு ‘ஒன் லைனர்’கள் மூலம் பலரைச் சிரிக்க வைத்தவள், இன்று முதன்முறையாக அழுகிறாள்..!

---

## :.ப்ளாஷ்பேக்



### மாநாடுபோல் பொதுக்கூட்டம்!



வீரகணேசன்

கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களைக் குறிக்கும் வகையில், இளைஞர் அணியின் வளர்ச்சி நிதியாக 55 ஆயிரத்து 555 ரூபாயை அன்றைய இளைஞர் அணி செயலாளர், இன்றைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினோம். 1992-ஆம் ஆண்டு, திறந்தவெளி மாநாடு போல் மதுரை மாவட்டம் சோழவந்தான் நகரில் இந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அண்ணன் அன்பில். பொய்யாமொழி அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். அப்போது மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராகப் பணியாற்றிய எனக்கு, இவையெல்லாம் மறக்க முடியாத நிகழ்வு என்பேன்.

**-சி.வீரகணேசன், மாநிலத் துணைச் செயலாளர், கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மதுரை**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033 - 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம்

### பதினைந்து பேர்!

**1957-ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து, கழகம் பெற்ற வெற்றி குறித்து பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் செய்யப்பட்டன. பதினைந்து பேர்தானே எனக் கேலி செய்யப்பட்டனர். ஏளனம் செய்யப்பட்டனர். எல்லாவற்றுக்கும் கழகப் பொதுச் செயலாளர் பேரறிஞர் அண்ணா பதிலடி கொடுத்தார். “கல்லடியும், சொல்லடியும் பழக்கப்பட்ட எங்களைவிட, எதிர்க்கட்சியாகச் செயல்பட வேறு யாரால் முடியும்? எதிர்க்கட்சி என்றால், எப்படி இருக்க வேண்டும் என அகில இந்தியாவுக்கும் உதாரணமாக விளங்குவோம்” என கேள்வி எழுப்பி, கேலி பேசியவர்களின் வாயை அடைத்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 157




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131